வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 23.07.2026 வியாழக்கிழமை இதழ் : 198 பக்கங்கள் : 08




## உறவுகளை ஆரத்தழுவியவாறு கண்கலங்கிய ஐரோப்பிய தூதர்!



யாழ்ப்பாணம், ஜூலை. 23

ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் மற்றும் பிரான்ஸ், இத்தாலி, ஜேர்மனி, நெதர்லாந்து நாட்டுத் தூதுவர்கள் உள்ளிட்ட உயர்மட்டப் பிரதிநிதிகள் குழுவினர், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தின் பிரதிநிதிகளை நேரில் சந்தித்து அவர்களின் குறைகளைக் கேட்டறிந்து மகஜரையும் பெற்றுக் கொண்டனர். 07

# "அரசியல் கைதிகள்" என்று சிறைகளில் எவருமில்லை!

### சபையில் கூறினார் நீதி அமைச்சர்

கொழும்பு, ஜூலை. 23

நாட்டிலுள்ள சிறைச்சாலைகளில் "அரசியல் கைதிகள்" என தனியாக எவரும் வகைப்படுத்தப்படவில்லை என்றும், நீதிமன்றத் தீர்ப்புகளில் அரசாங்கம் நேரடியாகத் தலையிட முடியாது என்றும் நீதி அமைச்சர் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி. பெரேரா- கடந்த ஜனாதிபதி தேர்தலிலும், பாராளுமன்ற தேர்தலிலும்-குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் - பிரிவினைவாத இயக்கங்களில் அரசியல் நோக்கத்துடன் பங்கேற்று, அதன் விளைவாக நீண்ட காலமாகச் சிறையில் இருக்கும் நபர்கள் உள்ளனர். சிலர் வழக்கு விசாரணை ஏதுமின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் சிலர் குற்றவாளிகளாக தீர்ப்பளிக்கப்பட்டு தண்டனை அனுபவித்து வருகின்றனர்.

இத்தகைய நபர்களை அரசியல் கைதிகளாகக் கருதி, 07



## செம்மணி மனிதப் புதைகுழியை நேரில் பார்வையிட்டது ஐரோப்பிய ஒன்றிய குழு!



யாழ்ப்பாணம், ஜூலை. 23

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் 8 பிரதிநிதிகள் கொண்ட குழுவினர் நேற்று செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகளை நேரில் பார்வையிட்டனர்.

செம்மணி மனிதப் புதைகுழியைப் பார்வையிடுவதற்கு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தின் அனுமதி கோரி விண்ணப்பிக்கப்பட்ட நிலையில் நீதிமன்றினால் அனுமதி வழங்கப்பட்டது.

இதனை அடுத்து நேற்று 07

## மனிதப் புதைகுழியில் விடயத்தில் சர்வதேச விசாரணையே தேவை!

### செம்மணியில் நேற்றுப் போராட்டம்



யாழ்ப்பாணம், ஜூலை. 23

செம்மணி மனிதப் புதைகுழி விவகாரத்தில் உடனடி சர்வதேச விசாரணை நடத்தப்படவேண்டும் என வலியுறுத்தி வடக்கு-கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கத்தினர் நேற்று செம்மணி வளைவு பகுதியில் நேற்று கவனவீர்ப்புப் 07

## 471 மனித எலும்புக்கூடுகள் செம்மணியில் அடையாளம்!

யாழ்ப்பாணம், ஜூலை. 23

இலங்கையில் மிக பெரிய மனிதப் புதைகுழியாக செம்மணி மனித புதைகுழி மாறியுள்ள நிலையில் 471 மனித எலும்புக்கூடுகள் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ளன.

செம்மணி சித்துப்பாத்தி மனிதப் புதைகுழி அகழ்வின் 40 ஆவது நாளான நேற்று 4 மனித எலும்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் 11 மனித எலும்புக்கூடுகள் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்ற நீதிவான் 07

## பிலிப்பைன்ஸ் சென்றார் விஜித ஹேரத்

மணிலா, ஜூலை. 23

வெளிவிவகார அமை ச்சர் விஜித ஹேரத், 33ஆவது ஆசிய பிராந்திய கூட்டமைப்புப் பேச்சுவார்த்தை மற்றும் தென் கிழக்கு ஆசியாவின் 07

## ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் கூறிய வார்த்தைகளில் எமக்கு திருப்தியில்லை!

### காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத் தலைவி



யாழ்ப்பாணம், ஜூலை. 23

ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளின் வார்த்தைகளில் எமக்கு திருப்தி இல்லை எனக் காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் தலைவி யோகராசா கனகரஞ்சனி தெரிவித்துள்ளார்.

செம்மணி சித்துப்பாத்தி இந்து மயானத்தில் மனிதப் புதைகுழியை பார்வையிட்ட ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளுடன் நடந்த சந்திப்பை அடுத்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் 07

## வலி. வடக்கு காணிகள் அபகரிப்பு; ஐரோப்பியக் குழுவிடம் முறையீடு



யாழ்ப்பாணம், ஜூலை. 23

வலி. வடக்கு பிரதேசத்தில் 6317 ஏக்கர் காணியை சுவீகரித்துள்ளதாக கடந்த 2013 ஆம் ஆண்டு ஐந்தாம் மாதம் வெளியிடப்பட்ட 07

## அடுத்த ஆண்டு முதல் வடக்குக்கு மெட்ரோ பஸ் சேவை அறிமுகம்!

### சபையில் அமைச்சர் பிமல் ரத்நாயக்க

கொழும்பு, ஜூலை. 23

வடக்கு மாகாணத்தில் மெட்ரோ பஸ் சேவைகளை அடுத்த ஆண்டு முதல் அறிமுகப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாணத்தின் பொது போக்குவரத்து சேவை வினைத்திறனாக்கப்படும் என போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அமர்வில் வாய்மூல விடைக்கான வினாக்கள் 07

## குட்டிமணி, தங்கத்துரைக்கு சிலை அமைப்பதற்கு இடைக்காலத் தடை!

### பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவு

யாழ்ப்பாணம், ஜூலை. 23

கடந்த 1983 ஆம் ஆண்டு வெலிக்கடைச் சிறைச்சாலையில் படுகொலை செய்யப்பட்ட தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் முன்னாள் தலைவர்களான குட்டிமணி மற்றும் தங்கத்துரை ஆகியோரின் உருவச்சிலையை வல்வெட்டித்துறையில் நிறுவுவதற்கு பருத்தித்துறை நீதவான் நீதிமன்றம் எதிர்வரும் ஓகஸ்ட் 4 ஆம் திகதி வரை இடைக்காலத் தடை விதித்து 07

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

### 11 இளைஞர்கள் கடத்தல் வழக்கு;

# முன்னாள் கடற்படை தளபதி விஜேகுணரத்னவுக்கு பிணை!



கொழும்பு, ஜுலை. 23
2008 ஆம் ஆண்டு கொழும்பு மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட விவகாரம் தொடர்பான வழக்கில், முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்னவுக்கு கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் செவ்வாய்க்கிழமை பிணை வழங்கி உத்தரவிட்டுள்ளது.

கடத்தப்பட்ட இளைஞர்கள் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவத்தில், குற்றவாளிகளை மறைப்பதற்கும் தப்பிக்க வைப்பதற்கும் உதவியளித்தார் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே அவர் சந்தேக நபராகப் பெயரிடப்பட்டுள்ளார்.

நீதிமன்றம் ஏற்கனவே பிறப்பித்திருந்த கட்டளைக்கு அமைய ஆஜரான விஜேகுணரத்ன, தன் மீதான குற்றச்சாட்டுகளை மறுத்ததுடன், தான் குற்றமற்றவர் எனவும் வாதிட்டுள்ளார்.

வழக்கை விசாரித்த கோட்டை நீதவான் பசான் அமரசேன, தலா 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் அவரை விடுவிக்க உத்தரவிட்டுள்ளார்.

மிகவும் பரபரப்பாகப் பேசப்பட்ட இந்த 11 இளைஞர்கள் கடத்தல் வழக்கின் மேலதிக விசாரணைகள் மற்றும் அடுத்த கட்ட வழக்கு விசாரணை டிசெம்பர் மாதம் 09 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (அ)

## விசாரணைக்கு செல்லாத அகில விராஜ் காரியவசம்

கொழும்பு, ஜுலை. 23
இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழு, ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் அகில விராஜ் காரியவசம், தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

ஜனாதிபதி செயலகத்திற்கு ஊழியர்களை நியமித்து, அவர்களைத் தனது தனிப்பட்ட மற்றும் அரசியல் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தியதன் மூலம் ஊழல் குற்றம் செய்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகள் குறித்தே, இந்த விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன் ஒரு கட்டமாக காரியவசம் நேற்று முன் தினம் ஆணைக்குழுவின் முன் முன்னிலையாகுமாறு அழைக்கப்பட்டிருந்தார்.

இருப்பினும், அவர் ஆணைக்குழுவில் முன்னிலையாகவில்லை என்றும், தனது வருகையின்மைக்கான எந்தக் காரணத்தையும் அதிகாரிகளுக்குத் தெரிவிக்கவில்லை என்றும் ஆணைக்குழு கூறியுள்ளது.

அரச ஊழியர்களைத் தனிப்பட்ட அல்லது அரசியல் நோக்கங்களுக்காகத் தவறாகப் பயன்படுத்துவது ஊழல் குற்றமாகக் கருதப்படும் நிலையில், அது தொடர்பான இலஞ்ச சட்டத்தின் விதிகளின் கீழ் இந்த விசாரணை நடத்தப்படுகிறது. (அ)

## தேவேந்திரமுனையில் துப்பாக்கிச் சூடு!

கொழும்பு, ஜுலை. 23
தேவேந்திரமுனை, கந்தர பகுதியில் உள்ள வீடு ஒன்றின் மீது துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்று புதன்கிழமை அதிகாலை காரில் வந்த சிலர் கைத்துப்பாக்கி ஒன்றினால் இந்த துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டு விட்டுத் தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் எவருக்கும் காயம் அல்லது பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

கந்தர பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஏதண்ட வீதி, தேவேந்திரமுனை பகுதியில் அமைந்துள்ள மீனவர் ஒருவரின் வீட்டின் மீதே இத்துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ)

## "டித்வா" அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள கால்நடைத்துறைக்கு அவசர மீட்புத் திட்டம்

கொழும்பு, ஜுலை. 23
"டித்வா" அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட நாட்டின் கால்நடை வளர்ப்புத் துறையை மீளக் கட்டியெழுப்பவும், பால் பண்ணையாளர்களின் வாழ்வாதாரத்தை வழமையான நிலைக்கு கொண்டுவரவும் விசேட அவசர நிவாரணத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

விவசாய, கால்நடை, நில மற்றும் நீர்ப்பாசன அமைச்சு வெளியிட்டுள்ள அறிவிப்பின் படி, அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட விலங்குகளுக்காக அரசாங்கம் ஏற்கனவே வழங்கி வரும் நஷ்டஈட்டுத் தொகைக்கு மேலதிகமாக இந்த புதிய திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

உலக வங்கியின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் இந்த அவசர மீட்புத் திட்டத்திற்கான அனைத்து ஆரம்பகட்ட நடவடிக்கைகளும் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளதுடன், கள மட்டத்தில் திட்டத்தை விரைவாக அமல்படுத்த தேவையான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

விலங்கு தீவனம் வழங்குதல், தொற்றுநோய்களைக் கட்டுப்படுத்துதல், விலங்கு நலன் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துதல், சேதமடைந்த உள்கட்டமைப்புகளை மீளமைத்தல், உணவு அமைப்புகளை வலுப்படுத்துதல் மற்றும் மரபணு மேம்பாட்டின் மூலம் உயர்தர பால் பசுக்களை உருவாக்குதல் ஆகியவை இத்திட்டத்தின் பிரதான நோக்கங்களாகும். (அ)

## புதுப்பிக்கத்தக்க மின் கட்டண நிர்ணயம் மக்கள் கருத்தறியும் நடவடிக்கை நிறைவு

கொழும்பு, ஜுலை. 23
புதுப்பிக்கத்தக்க சக்தி மூலங்களின் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தைக் கொள்முதல் செய்வதற்கான கட்டணங்களைத் தீர்மானிக்கும் நடவடிக்கைக்காக பொதுமக்களின் கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளும் செயல்முறை நேற்று நிறைவடைந்ததாக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில், அடுத்த 6 மாதங்களுக்கான புதுப்பிக்கத்தக்க மின்சாரக் கொள்முதல் கட்டணங்கள் தீர்மானிக்கப்படவுள்ளதாக ஆணைக்குழுவின் பணிப்பாளர் ஜயநாத் ஹேரத் தெரிவித்துள்ளார்.

இலங்கை மின்சாரச் சீர்திருத்தச் சட்டத்தின் கீழ், சூரிய, காற்று மற்றும் பயோமாஸ் உள்ளிட்ட புதுப்பிக்கத்தக்க சக்தி மூலங்களின் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை இலங்கை மின்சார சபையின் தொடர்ச்சி நிறுவனங்களிடமிருந்து கொள்முதல் செய்வதற்கான விலை மற்றும் விலை சூத்திரத்தை தீர்மானித்து அங்கீகரிக்கும் அதிகாரம் இலங்கை பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, புதுப்பிக்கத்தக்க சக்தி மூலங்களிலிருந்து உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தைக் கொள்முதல் செய்வதற்கான பொருத்தமான விலைச் சூத்திரங்கள் தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளதாக ஜயநாத் ஹேரத் குறிப்பிட்டார்.

இந்த விலைச் சூத்திரங்களின் அடிப்படையில் மின்சாரக் கட்டணங்களை நிர்ணயிப்பது தொடர்பான பொதுமக்கள் ஆலோசனைச் செயல்முறை சுமார் இரண்டு மாதங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டதாகவும், அதன் போது பல்வேறு தரப்பினருடன் கலந்துரையாடி தேவையான தகவல்கள் மற்றும் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (அ)

## ஒதியமலைக்குளத்தின் புனரமைப்பு ஆரம்பம்!

முல்லைத்தீவு, ஜுலை. 23
"நீர்ப்பாசனத்தின் பெருமை - எமது பாரம்பரியம்" 1000 குளங்களைப் புனரமைக்கும் திட்டத்தின் கீழ், முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான், ஒதியமலைக் குளத்தின் புனரமைப்புப் பணிகள் கூட்டுறவு அபிவிருத்தி பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

பல வருடங்களாகப் புனரமைக்கப்படாமல் இருந்த இக்குளம் அழிவடையும் அபாயத்தில் இருந்த நிலையில், விவசாயிகளால் அமைச்சரிடம் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு இணங்கவே இப்புனரமைப்புப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

விவசாயப் பிரிவுகளின் விவசாயச் செழிப்பையும் கிராமியப் பொருளாதாரத்தையும் மேம்படுத்தும் நோக்கில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதுடன், முல்லைத்தீவு மாவட்டத்தில் 10 குளங்கள் புனரமைக்கப்படவுள்ளன.

இக்குளத்தைப் புனரமைப்பதன் மூலம் 300 இற்கும் மேற்பட்ட விவசாயக் குடும்பங்கள் நேரடி மற்றும் மறைமுகப் பயனடைவதுடன், 150 ஏக்கருக்கும் மேற்பட்ட நிலப்பரப்பில் சிறுபோகம் மற்றும் பெரும்போகம் ஆகிய இரு போகங்களிலும் விவசாயம் செய்ய முடியும்.

இந்நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ். திலகநாதன், மகாவலி அதிகார சபையின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் எஸ். ஏ. ஜி. டி. கெனிசியஸ் உட்பட ஒதியமலைப் பகுதி விவசாயிகள் பெருந்திரளானோர் கலந்துகொண்டனர். (அ)



## யோசிதவுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, ஜுலை. 23
முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் புதல்வர் யோசித ராஜபக்ஷவுக்கு சொந்தமான தனியார் வங்கி கணக்கொன்றில் 17 மில்லியன் ரூபா பணம் வைப்பிலிடப்பட்டமை தொடர்பான வழக்கை எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 7 ஆம் திகதி வரை ஒத்திவைத்து ஹோமாகம மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மேற்படி வழைக்கு நேற்று முன்தினம் ஹோமாகம மேல் நீதிமன்ற நீதிபதி கிரிஷாந்தி அமரதுங்க முன்னிலையில் விசாரணைக்க எடுத்துக் கொள்ளப்பட்டபோதே அவர் இவ்வாறு உத்தரவு பிறப்பித்திருந்தார்.

பணச் சுத்திகரிப்பு தடுப்புச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்கின் பூரண விசாரணைகள் நேற்றைய தினம் இடம்பெற்றிருந்தது. வழக்கு விசாரணையின் போது பிரதிவாதியான யோசித ராஜபக்ஷ திறந்த நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்ததோடு, அவர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி சம்பத் மெண்டிஸ் முன்னிலையாகியிருந்தார். (அ)

## யாழ்ப்பாணம் வந்த அவுஸ்ரேலிய அமைப்பு அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து ஆராய்வு

யாழ்ப்பாணம், ஜுலை. 23
யாழ்ப்பாணத்தில் கல்வி பொருளாதார சமூக முன்னேற்றங்களுக்கான செயற்பாடுகளை மேற்கொள்ளத் தீர்மானித்திருப்பதாக அவுஸ்ரேலியாவைத் தளமாகக் கொண்ட அரச சார்பற்ற நிறுவனமான 'நூல்' அமைப்பின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே குறித்த அமைப்பின் ஸ்தாபகரான டேஷ் பாலகப்ரமணியம் இதனைத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறை வரையிலான ஆயிரம் கிலோமீற்றர் சைக்கிள் பயணத்தை அவுஸ்ரேலிய பிரஜைகள் உட்பட்ட நூல் அமைப்பின் தோழர்களோடு தாம் நிறைவு செய்துள்ளதாகவும், குறித்த பயணம் தமது சமூக சிந்தனைகளை மேம்படுத்த உதவுவதாகவும் குறிப்பிட்ட அதேவேளை, குறித்த பயணத்திற்கான ஒவ்வொரு கிலோமீற்றருக்கும் வெளிநாட்டு வாழ் மக்களின் நிதி அன்பளிப்புகள் கிடைக்கப் பெறுவதாகவும் குறித்த உதவி மூலம் இங்குள்ள செயற்றிட்டங்களை மேற்கொள்ள திட்டமிட்டிருப்பதாகவும் கூறினார். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
23.07.2026 வியாழக்கிழமை
பராபவ வருடம், ஆடி 07

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## அர்ச்சுனாவும் சாணக்கியனும்

கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக் குழுவின் கூட்டத்தில் இருந்து யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா வெளியேற்றப்பட்டதாகக் கூறப்படும் சம்பவத்தை இலங்கை தமிழரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழுவின் தலைவர் சாணக்கியன் இராசமாணிக்கம் செவ்வாய்க்கிழமை சபையில் கண்டனம் செய்தார். அதற்காக அவருக்கு அர்ச்சுனா உடனடியாக நன்றியும் தெரிவித்தார்.

அந்த கூட்டத்தில் இருந்து தான் வெளியேற்றப்படவில்லை என்றும் பொலிஸார் தன்னைப் பாதுகாப்பாக வெளியே கூட்டிச்சென்றனர் என்றும் அர்ச்சுனா சமூக ஊடகத்தில் வெளியிட்ட காணொளியை சாணக்கியன் பார்க்கவில்லைப் போலும்.

அண்மையில் தெல்லிப்பழை பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுவின் கூட்டத்தில் இன்னொரு யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துடன் வாக்குவாதத்தில் ஈடுபட்ட அர்ச்சுனா அவரை "தூக்கியடிப்பண்டா " என்று அச்சுறுத்திய சம்பவத்தை சாணக்கியன் சமூக ஊடகக் காணொளியில் பார்க்காமல் இருந்திருக்கமாட்டார்.

ஒரு பாராளுமன்ற உறுப்பினரை அர்ச்சுனா அவ்வாறு கண்ணியமற்ற முறையில் அவதூறாகப் பேசி அச்சுறுத்தியதை கண்டிக்கவேண்டும் என்று ஏன் சாணக்கியனுக்கு தோன்றவில்லை. அர்ச்சுனாவுக்கு பாதிப்பு என்றவுடன் சபைக்குள் தர்மாவேசம் கொண்ட சாணக்கியனுக்கு கஜேந்திரகுமாருடன் அவர் நடந்துகொண்ட கேவலமான முறைக்காக கண்டனம் செய்ய ஏன் மனம் வரவில்லை ?

முன்னர் ஒரு தடவை பாராளுமன்றத்தில் இன்னொரு சமூகத்தை இழிவுசெய்யும் வகையில் அர்ச்சுனா உரையாற்றியதற்காக யாழ்ப்பாண மாவட்ட தமிழரசு கட்சி பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தமிழ்ச் சமூகத்தின் சார்பில் அந்த சமூகத்திடம் மன்னிப்புக் கேட்பதாக சபைக்குள் கூறினார்.

சபைக்கு உள்ளேயும் வெளியேயும் தான் தோன்றித்தனமாக நடந்துகொள்ளும் ஒரு உறுப்பினரின் அநாகரிகமான நடத்தைக்காக முழுத் தமிழ்ச் சமூகத்தின் சார்பிலும் மன்னிப்புக் கேட்பதற்கான உரிமையையும் அதிகாரத்தையும் சிறீதரனுக்கு யார் கொடுத்தார்கள் என்று தெரியவில்லை.

பொது வெளியில் கண்ணியமாக நடந்துகொள்ளும் பண்பு தெரியாத ஒரு பேர்வழிக்கு ஆதரவான எந்தவொரு பேச்சும் செயற்பாடும் அவரது விசமத்தனம் கலந்த கோமாளித்தனத்தை ஊக்குவிப்பதாகவே அமையும் என்பதை சாணக்கியனின் கவனத்துக்கு கொண்டு வருவதற்காகவே இந்த சம்பவங்களை இங்கே கூறுகிறோம்.

கடந்த சுமார் இரு வருடங்களாக யாழ்ப்பாணத்தில் அல்லது கிளிநொச்சியில் நடைபெற்ற எந்தவொரு மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டமாவது அல்லது பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழு கூட்டமாவது ஒழுங்காக நடைபெற்றிருக்கிறதா? மாவட்டங்களின் அபிவிருத்தித் தேவைகள் குறித்து சுமுகமான முறையில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதுண்டா?

இதற்கெல்லாம் பெரும்பாலும் அர்ச்சுனா என்ற ஒரு தனியாளின் முறைகேடான நடவடிக்கைகள்தான் காரணமாக இருந்திருக்கிறது. இது தொடர்பாக தமிழ் மக்கள் பெரும் வேதனை அடைந்திருக்கிறார்கள். ஆனால், அவரின் சேட்டைகளை அதிகரிக்கின்றனவே தவிர, குறைந்த பாடாக இல்லை. இந்த இலட்சணத்தில் வடமாகாண முதலமைச்சராக வரவும் அவருக்கு ஆசை.


மற்றைய தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் கிளப்புவதற்கு தயக்கும் சர்ச்சைக்குரிய பிரச்சினைகளை, ஊழல்களை, முறைகேடுகளை அர்ச்சுனா துணிச்சலுடன் பாராளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் அம்பலப்படுத்துகிறார் என்று கூறி ஒரு தரப்பினர் அவரின் நடத்தைகளை நியாயப்படுத்துகிறார்கள்.

ஆயிரந்தான் இருந்தாலும், அர்ச்சுனா சொல்வது சரிதானே... அவர் எழுப்பும் கேள்விகளுக்கு முதலில் பதில் சொல்லிவிட்டு அல்லவா அடுத்த வேலையைப் பார்க்க வேண்டும் என்று வாதிடும் ஒரு கூட்டமும் இருக்கிறது.

மாவட்ட அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பில் முறையாக விவாதித்து உகந்த தீர்மானங்களை எடுக்க வேண்டிய கூட்டங்களுக்கு வந்து "ஊழல் முறைகேடுகளை விசாரிக்க வேண்டும்..." ஒருவரும் ஒழுங்காக வேலை செய்வதில்லை என்று உயரதிகாரிகளை அவமதித்துக் குற்றப்பத்திரம் வாசிப்பதன் மூலம் தன் மீது கவனத்தை ஈர்ப்பதே அர்ச்சுனாவின் நோக்கம்.

நேர்மறையானதோ, எதிர்மறையானதோ எந்த வழியில் என்றாலும் விளம்பரம் கிடைத்தால் சரி என்று திருப்தியடையும் மனநிலையைக் கொண்ட ஒரு பேர்வழியின் நடவடிக்கைகளுக்கு நியாயம் கற்பிக்கும் எந்தவொரு சொல்லும் செயலும் யாழ்ப்பாண அரசியலை மேலும் கோமாளித்தனமாக்குவதற்கே உதவும் என்பதை இளம் அரசியல்வாதியான சாணக்கியனுக்கு கூறிவைக்க விரும்புகிறோம்.

# சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு எதிரான பிரச்சாரத்தை தீவிரப்படுத்தியிருக்கும் அமெரிக்கா



அமெரிக்க இராணுவ பலத்தின் வீழ்ச்சி விவாதத்திற்குரியதாக இருந்தாலும், அதன் தார்மீக வீழ்ச்சி என்பது தர்க்கத்திற்கு அப்பாற்பட்டது (மறுக்க முடியாதது). சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு (International Criminal Court) எதிராக அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மார்கோ ரூபியோ விடுத்த போர்ப் பிரகடனத்தைக் கேட்டு பலர் அதிர்ச்சியடைந்திருக்கலாம். ஆனால், இதில் அதிர்ச்சியடைவதற்கு ஒன்றுமில்லை.

உண்மையில், இரண்டாம் உலகப் போர் முடிவுக்கு வந்ததிலிருந்து, அமெரிக்கா உயர் தார்மீகக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு வெளியுறவுக் கொள்கையைப் பின்பற்றியதாகத் தெரியவில்லை.

மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களைத் தடுத்து, குற்றவாளிகளைத் தண்டிப்பதற்காக 2002 ஆம் ஆண்டில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் நிறுவப்பட்டது. ஆனால், கடந்த வாரம் வால் ஸ்ட்ரீட் ஜர்னலில் (Wall Street Journal) வெளியான ஒரு நீண்ட கட்டுரை வடிவிலான கருத்தில் இந்த உலகளாவிய நீதிமன்றம் அமெரிக்க இராணுவம் மற்றும் சட்ட அமலாக்க நடவடிக்கைகளில் தலையிடுகிறது என்றும், அமெரிக்க இறையாண்மையை ஆபத்தில் ஆழ்த்துகிறது என்றும், எனவே இது கலைக்கப்பட வேண்டும் என்றும் ரூபியோ வாதிட்டார்.

ஒரு நியாயமானதும் ஒழுங்கமைவானதுமான உலக ஒழுங்கைக் கொண்டுவருவதற்காக வடிவமைக்கப்பட்ட பல சர்வதேச உடன்படிக்கைகளில் அமெரிக்கா கையெழுத்திடாதது போன்றே , சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை உருவாக்கிய ரோம் சட்டத்திலும் (Rome Statute) அது கையெழுத்திடவில்லை.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு எதிராகப் போர்ப் பிரகடனம் செய்வது என்பது, இனப் படுகொலை மற்றும் பிற கடுமையான போர்க் குற்றங்களைத் தடுப்பது போன்ற அதன் நோக்கங்களை எதிர்ப்பதாகும். இரண்டாம் உலகப் போரின் போது ஹோலோகாஸ்ட் (யூத இனப்படுகொலை), 1970 களில் கம்போடியாவின் கொலைக் களங்கள் மற்றும் 1990களில் ருவாண்டா மற்றும் பொஸ்னியா இனப் படுகொலைகளைத் தடுக்கத் தவறிய உலகளாவிய அவமானத்திலும் தோல்வியிலுமே இந்த நீதிமன்றத்தின் அடித்தளம் அமைந்துள்ளது.

நுரம்பெர்க் (Nuremberg) தீர்ப்பாயம் மற்றும் ருவாண்டா, பொஸ்னியா வழக்குகளை விசாரிப்பதற்காக அமைக்கப்பட்ட தற்காலிக நீதிமன்றங்களைப் போலன்றி, சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் - ஒரு உலகளாவிய காவல்துறை மற்றும் நீதித்துறை போன்றது - அச்சமோ அல்லது தயவோ இன்றி விசாரிக்கவும், கைது ஆணைகளைப் பிறப்பிக்கவும், விசாரணைகளை நடத்தவும் அதிகாரங்களைப் பெற்றிருக்கிறது. குற்றவாளிகளைத் தண்டிக்கும் அதிகாரமும் அதற்கு இருக்கிறது.

இருப்பினும், சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் பலவீனமான நாடுகளில் உள்ள போர்க் குற்ற சந்தேக நபர்களைத் தீவிரமாகப் பின்தொடரும் அதே வேளையில், மேற்கத்தைய நாடுகளால் பாதுகாக்கப்படும் பெரிய அளவிலான குற்றவாளிகளைத் தவிர்ப்பதாக விமர்சனத்திற்குள்ளானது.

2023. மார்ச்சில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினுக்கு எதிராக சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் மிக விரைவாகக் கைது ஆணையைப் பிறப்பித்தது. ஆனால் அதே ஆண்டின் பிற்பகுதியில் காசா இனப்படுகொலை தொடர்பாக இஸ்ரேலிய தலைவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க அது மிகவும் மந்தமாகச் செயல்பட்டது.

ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து உக்ரைனியக் குழந்தைகளை சட்டவிரோதமாக ரஷ்யாவிற்கு கடத்திச் சென்றதாக புட்டின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றமானது, காசா பகுதியில் இஸ்ரேல் நடத்திய குழந்தைகள் மற்றும் பொது மக்களின் படுகொலையுடன் ஒப்பிடுகையில் மிகவும் குறைவானதாகும்.

புட்டின் விவகாரத்தில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தைப் பாராட்டிய அமெரிக்கா, இஸ்ரேல் மீதான விசாரணையை நீதிமன்றம் தொடங்கியவுடன், அந்தத் தீர்ப்பாயத்தை அவமதிப்பதற்கும் கலைப்பதற்குமான பிரச்சாரத்தைத் தொடங்குவதில் தீவிரமாக இறங்கியது.

தனது கட்டுரையில், அமெரிக்க எல்லைப் பாதுகாப்பு முகவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களும் வெளிநாட்டு நீதிபதிகளால் விசாரிக்கப்படுவதற்காக "ஒரு சர்வதேச நீதிமன்றத்தின் முன் இழுத்துச் செல்லப்படும்" காட்சிகளை ரூபியோ சுட்டிக்காட்டினார். ரோம் சட்டத்தில் உறுப்பினர்களாக இல்லாத நாடுகளில் நடக்கும் குற்றங்களை விசாரிக்கும் அதிகார வரம்பு சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு இல்லாதபோது, இந்த மிகைப்படுத்தல் தேவையற்றது.

அமெரிக்காவோ அல்லது இஸ்ரேலோ இந்தச் சட்டத்தை அங்கீகரிக்கவில்லை; அத்துடன் அமெரிக்க மண்ணில் அமெரிக்க குடிவரவு மற்றும் சுங்க அமலாக்கத்துறை அதிகாரிகளின் அத்துமீறல்கள் குறித்து நீதிமன்றம் எந்த விசாரணையையும் தொடங்கவில்லை.

ஆப்கானிஸ்தானும் பாலஸ்தீனமும் ரோம் சட்டத்தின் உறுப்பு நாடுகளாக இருந்ததால் மட்டுமே, அமெரிக்காவினதும் இஸ்ரேலினதும் நடத்தைகள் குறித்த விசாரணைகளை சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் தொடங்கியது. கடந்த ஆண்டு, "அமெரிக்காவையும் நமது நெருங்கிய நட்பு நாடான இஸ்ரேலையும் குறிவைத்து சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் சட்டவிரோதமானதும் ஆதாரமற்றதுமான நடவடிக்கைகளை" எடுப்பதாகக் கூறி சாடிய டிரம்ப், ஒரு "தேசிய அவசர நிலையை" பிரகடனப்படுத்தும் நிர்வாக உத்தரவைப் பிறப்பித்தார்.

பின்னர் அவர் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் தலைமை வழக்கறிஞர் கரீம் கான் மற்றும் ஆறு நீதிபதிகள் உள்ளிட்ட நீதிமன்ற அதிகாரிகளுக்கு எதிராகப் பல தடைகளை விதித்தார்.

மேலும், ரோம் சட்டத்தின் 2010 கம்பாலா திருத்தங்களை (Kampala Amendments) அமெரிக்கா தனது வெளியுறவுக் கொள்கைக்கு, குறிப்பாக வெனிசுலா மற்றும் ஈரானில் அதன் நடவடிக்கைகளைக் கருத்தில் கொண்டு, ஒரு அச்சுறுத்தலாகப் பார்க்கிறது.

அந்தத் திருத்தங்கள் பின்வருமாறு குறிப்பிடுகின்றன் "ஒரு நாட்டின் அரசியல் அல்லது இராணுவ நடவடிக்கையை திறம்பட கட்டுப்படுத்தும் அல்லது வழிநடத்தும் நிலையில் உள்ள ஒரு நபரால், ஐக்கிய நாடுகள் சபையின் சாசனத்தை வெளிப்படையாக மீறும் வகையில், அதன் தன்மை, தீவிரம் மற்றும் அளவு ஆகியவற்றின் அடிப்படையில் ஆக்கிரமிப்புச் செயலைத் திட்டமிடுதல், தயாரித்தல், தொடங்குதல் அல்லது செயல்படுத்துதல் குற்றமாகும்."

போலீஸ், நீதிமன்றங்கள் மற்றும் சிறைகள் இல்லாத உலகைக் குற்றவாளிகள் மட்டுமே கற்பனை செய்து பார்க்க முடியும். அதற்கேற்ப, சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் இல்லாத உலகையே ஒரு போர்க்குற்றவாளி - அல்லது போர்க்குற்றங்களைச் செய்ய நினைப்பவர் - விரும்புவார்.

சி.என்.என். (CNN) செய்தி நிறுவனத்தின் தகவல்களின் பிரகாரம் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை "கலைக்கும்" அமெரிக்க வெளியுறவுத்துறையின் திட்டமானது, பிற நாடுகளை இந்த நீதிமன்றத்திலிருந்து விலகுமாறு அழுத்தம் கொடுப்பதை உள்ளடக்கியிருக்கும்.

(மிகுதி நாளை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




**மேடம்**
தன்னம்பிக்கையுடன் பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். தாயார் ஆதரித்து பேசுவார். வியாபாரத்தில் எதிர்பாராத தனலாபம் உண்டு. உத்தியோகத்தில் சலுகைகள் கிடைக்கும். தன்னம்பிக்கை துளிர்விடும்.

**இடபம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர், நண்பர்கள் உங்களை கலந்தாலோசித்து சில முடிவுகள் எடுப்பார்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் முக்கியத்தும் தருவார்கள். அமோகமான நாள்.

**மிதுனம்**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். உறவினர்கள் மதிப்பார்கள். வியாபாரத்தில் புது தொடர்பு கிடைக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகள் உதவுவார்கள். கனவு நனவாகும் நாள்.

**கடகம்**
எதிர்ப்புகள் அடங்கும். பால்ய நண்பர்கள் உதவுவார்கள். புதுவேலை கிடைக்கும். வியாபாரத்தில் பங்குதாரர்களின் பிரச்னை தீரும். உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட உரிமையை கிடைக்கும்.

**சிம்மம்**
குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்னைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். வியாபாரத்தில் ரெட்டிப்பு லாபம் உண்டு. உத்தியோகத்தில் ஆலோசனை ஏற்கப்படும். தைரியம் கூடும் நாள்.

**கன்னி**
கணவன் மனைவி அன்யோன்யம் பிறக்கும். தோற்றப்பொலிவுக் கூடும். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். உத்தியோகத்தில் சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள். திடீர் திருப்பம் நிறைந்த நாள்.

**துலாம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் தேவையற்ற விஷயங்களை மனதில் நினைத்து குழம்பிக்கொண்டிருக்காதீர்கள். உத்தியோகத்தில் ஈகோ பிரச்னை வந்து நீங்கும். கவனம் தேவைப்படும் நாள்.

**விருட்சிகம்**
கணவன்-மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது. வியாபாரத்தில் வேலையாட்களால் பிரச்னைகள் வரக்கூடும். உத்தியோகத்தில் பொறுப்புகள் அதிகரிக்கும். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**தனுசு**
உங்களின் இலக்கை நோக்கி முன்னேறுவீர்கள். வியாபாரத்தில் புதுத் தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி. உத்தியோகத்தில் வைத்து உங்கள் கை ஓங்கும். திட்டங்கள் நிறைவேறும் நாள்.

**மகரம்**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். பிரியமானவர்களுக்காக சிலவற்றை விட்டுக் கொடுப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**கும்பம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வீடுவாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். அலுவலகத்தில் மரியாதைக் கூடும். புதிய பாதை தெரியும்.

**மீனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் இனந்தெரியாத சின்ன சின்ன கவலைகள் வந்து போகும். வியாபாரத்தில் பாக்கிகள் வசூலாவதில் தாமதம் ஏற்படும். உத்தியோகத்தில் கவனம் செலுத்துவது நல்லது.

# பணம் செலுத்தி பல மாதங்களாகிவிட்டன மின் இணைப்புக்கள் வழங்கப்படவில்லை!

## கிளிநொச்சி மக்கள் குற்றச்சாட்டு

கிளிநொச்சி, ஜூலை. 23

கிளிநொச்சியில் புதிய மின் இணைப்பைப் பெற்றுக்கொள்வதற்காக இலங்கை மின் விநியோக சேவைகள் நிலையத்தில் கட்டணம் செலுத்தி பல மாதங்கள் கடந்த நிலையிலும், இதுவரை மின் இணைப்புக்கள் வழங்கப்படவில்லை எனப் பொதுமக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

அவசர தேவைகளுக்காக மின்சாரத்தைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு, இணைப்புக் கட்டணமாக 42,000 ரூபாய் செலுத்தியும் தமக்கு இன்னும் மின் இணைப்பு வழங்கப்படவில்லை எனப் பாதிக்கப்பட்ட பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

கட்டணத்தைச் செலுத்திய பின்னர், இது குறித்து அறிவதற்காகப் பல தடவைகள் இலங்கை மின் விநியோக சேவைகள் நிலையத்துக்கு சென்று வினவியபோதெல்லாம், மின் இணைப்பு வழங்குவதற்குத் தேவையான பொருள்கள் இல்லை என்ற ஒரே பதிலையே அதிகாரிகள் தொடர்ந்து கூறி வருவதாக பொதுமக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

கிளிநொச்சி பகுதியில் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் இவ்வாறு பணத்தைச் செலுத்திவிட்டு, பல மாதங்களாக மின் இணைப்புக்களைக் காத்திருக்கும் அவல நிலை ஏற்பட்டுள்ளது.

இது குறித்து கிளிநொச்சி இலங்கை மின் விநியோக சேவைகள் நிலையத்துக்கு பொறுப்பான அதிகாரிகளிடம் கேட்டபோது, மின் இணைப்பு வழங்குவதற்குத் தேவையான வயர், தூண் மற்றும் ஏபிசி பண்டல் வயர் என்பன இல்லாத காரணத்தால் மின் இணைப்பை வழங்க முடியாதுள்ளது எனத் தெரிவித்துள்ளனர். (அ)

# பாடசாலைக்கு ஒழுங்காகச் செல்வதில்லை என்ற குற்றச்சாட்டில் 4 பாடசாலை மாணவர்கள் கைது!

யாழ்ப்பாணம், ஜூலை. 23

வல்வெட்டித்துறை பொலிஸாரால் பாடசாலைக்கு ஒழுங்காக செல்வதில்லை என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட நான்கு மாணவர்களும் நேற்று முன் தினம் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன் தினம் காலை வல்வெட்டித்துறை பொலிஸாரால் சிலாப்புலம் கிராமத்தைச் சேர்ந்த 4 பாடசாலை மாணவர்கள் கைது செய்யப்பட்டனர்.

பாடசாலைக்கு ஒழுங்காகச் சமூகமளிக்கவில்லை என்ற குற்றச்சாட்டின் பேரில் இம்மாணவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

கைது செய்யப்பட்ட மாணவர்கள், இரவு 7:48 மணி வரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவோ அல்லது விடுவிக்கப்படவோ இல்லை.

இதனால் பொலிஸ் நிலையத்துக்குச் சென்ற பெற்றோர், மாணவர்களைத் தங்களுடன் அனுப்பி வைக்குமாறு கோரியும் பதில் கிடைக்கவில்லை என பெற்றோர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் மனித உரிமைகள் ஆணையாளரின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டிருந்த நிலையில் பொலிஸ் பிணையில் மாணவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

சிறுவர்கள் என்ற காரணத்தினால் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதாகவும், எனினும் இன்று (நேற்று) காலை பொலிஸ் நிலையம் வருமாறு அழைக்கப்பட்டுள்ளதாகவும் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாகவும் வல்வெட்டித்துறை பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# வவுனியாவில் திருட்டு சம்பவங்கள் மூன்று பேர் பொலிஸாரினால் கைது!

வவுனியா, ஜூலை. 23

வவுனியாவில் இடம்பெற்ற பல திருட்டுச் சம்பவம் தொடர்பில் மூவர் நேற்று முன் தினம் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா தலைமை பொலிஸ் நிலைய குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த மூன்று நாள்களுக்கு முன் வவுனியா வைத்தியசாலைக்கு முன் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளில் திருடப்பட்டிருந்தது.

அத்துடன் இறம்பைக்குளம் பகுதியில் உள்ள கருமாரி அம்மன் கோயில் மற்றும் அதே பகுதியில் உள்ள நாகபூசனி அம்மன் கோயில், குட்செட் வீதியில் உள்ள கருமாரி அம்மன் கோயில், வவுனியா நகர் இலுப்பையடி பகுதியில் உள்ள உணவகம் என பல இடங்களில் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றிருந்தன.

திருடப்பட்ட மோட்டார் சைக்கிளின் உரிமையாளர், உணவக உரிமையாளர் மற்றும் கோயில் நிர்வாகத்தினர் வவுனியா தலைமை பொலிஸ் நிலைய குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தனர்.

குறித்த முறைப்பாட்டுக்கமைய, வவுனியா தலைமை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர் ஆர்.எம்.ஜே.எஸ்.ரத்னமலவின் வழிகாட்டலில், வவுனியா பொலிஸ் நிலைய குற்றத் தடுப்புப் பிரிவின் பிரிவு பொறுப்பதிகாரி ஐ.பீ.இலங்கசிங்க தலைமையிலான குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டனர்.

இதன்போது தேக்கவத்தை பகுதியில் வசிக்கும் 25 வயதுடைய நபர் ஒருவர் மற்றும் சகோதரர்களான கள்ளிக்குளம் பகுதியில் வசிக்கும் 23 வயதுடைய தம்பி மற்றும் மகாறம்பைக்குளம் பகுதியை சேர்ந்த 28 வயதுடைய அண்ணன் உட்பட மூவர் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் மோட்டார் சைக்கிள் மற்றும் உணவகத்தில் திருடப்பட்ட சிகரெட் பெட்டிகள், திருட்டுக்கு பயன்படுத்தும் கம்பிகள் மீட்கப்பட்டன.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ள வவுனியா தலைமை பொலிஸ் நிலைய குற்றத் தடுப்பு பிரிவினர் சந்தேக நபர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவித்தனர். (அ)

# யாழில் சந்திப்புக்களில் ஈடுபட்ட ஐரோப்பிய ஒன்றியத் தூதுக்குழு

யாழ்ப்பாணம், ஜூலை. 23

ஐரோப்பிய ஒன்றியத்தின் உயர் மட்ட தூதுக்குழுவினர் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்து பல்வேறு பட்ட சந்திப்புக்களில் ஈடுபட்டனர்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளும் பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, நெதர்லாந்து உள்ளிட்ட சில ஐரோப்பிய நாடுகளின் தூதுவர்களும் நேற்று முன் தினம் காலை விமானம் மூலம் யாழ்ப்பாணத்தை வந்தடைந்தனர்.

இவர்கள் யாழ்ப்பாணத்தில் தனியார் விருந்தினர் விடுதியில் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் சிவில் சமூகத்தின் பிரதிநிதிகளை சந்தித்து கலந்துரையாடினர்.

அரசியல் கட்சிகளின் கலந்துரையாடலில் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் சி.வீ.கே.சிவஞானம், ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பின் சார்பில் முன்னாள் வடக்கு மாகாண கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரன், யாழ்.மாநகர சபை முதல்வர் மதிவதனி விவேகானந்தராஜா, நல்லூர் பிரதேச சபை தவிசாளர் பத்மநாதன் மயூரன் உள்ளிட்ட மாநகர சபை உறுப்பினர்கள் பங்கேற்றனர். (அ)

# வல்லிபுரம் பகுதியில் தீ பரவல்!



யாழ்ப்பாணம், ஜூலை. 23

வடமராட்சி பருத்தித்துறை வல்லிபுரக் கோவிலை அண்மித்த மருதங்கேணி-பருத்தித்துறை வீதிக்கு தெற்கு பகுதியில் நேற்று முன் தினம் விஷமிகளால் மூட்டப்பட்ட தீயினால் வயல் வேலிகள், புற்தரைக்கள், பனை மரங்கள் என்பன எரிந்துள்ளன அண்மைக் காலமாக விஷமிகளால் தீ மூட்டப்பட்டு பல ஏக்கர் மேச்சல் தரைகள், வயல் நிலங்கள் வயல் வேலிகள் எரிந்து நாசமாகிவருமின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஒகஸ்ட் மாத நடுப்பகுதி வரை டெங்கு உயர் ஆபத்துக் காலம்!



## சுகாதார அமைச்சர் எச்சரிக்கை

கொழும்பு, ஜுலை. 23

இலங்கையில் டெங்கு பரவும் அபாயம் அடுத்த மூன்று வாரங்களுக்கு தொடர்ந்து அதிகரிக்கும் என்று சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

ஒகஸ்ட் மாத நடுப்பகுதி வரை உள்ள காலம் உயர் ஆபத்து மிக்க கட்டமாக அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

டெங்கு பரவல் தற்போது ஒரு குறிப்பிட்ட கட்டுப்பாட்டின் கீழ் உள்ளதாகவும், பல மாவட்டங்களில் பதிவாகும் நோயாளர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், மூன்று மாவட்டங்கள் தொடர்ந்து கவலைக்குரியவையாக இருப்பதாகவும், அவற்றுக்குக் கூடுதல் கவனம் தேவைப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நிலவும் மழைக்காலச் சூழல் காரணமாக புதிய நுளம்பு குடம்பிகள் உருவாகும் என்பதால், பொது மற்றும் தனியார் இடங்களைத் தொடர்ச்சியாகத் தூய்மையாக வைத்திருப்பது அவசியமாகும் என அமைச்சர் வலியுறுத்தியுள்ளார். (அ)

# மாத்தறையில் தனியார் பஸ்ஸில் சிக்கி 6 வயது சிறுமி சம்பவ இடத்திலேயே பலி!

கொழும்பு, ஜுலை. 23

மாத்தறை-கதிர்காமம் பிரதான வீதியின் தொடங்கொட - லுணுகலப்புவ சந்தியில் தனியார் பயணிகள் பஸ் ஒன்றில் சிக்கி 6 வயது சிறுமி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாக திக்வெல்ல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர் திக்வெல்ல பகுதியிலுள்ள பாடசாலையொன்றில் முதலாம் தரத்தில் கல்வி கற்றுவந்த, லுணுகலப்புவ பகுதியைச் சேர்ந்த சிறுமியொருவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன் தினம் காலை சிறுமி தனது தாய் மற்றும் முன்பள்ளிக்குச் செல்லும் சகோதரனுடன் திக்வெல்ல நகரத்துக்கு செல்வதற்காக மாத்தறை - மித்தெனிய பஸ்ஸில் ஏறச் சென்றபோதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் சிறுமியின் தாய் தெரிவிக்கையில், தானும் தனது மகனும் முதலில் பஸ்ஸில் ஏறியதாகவும், சிறுமி பஸ்ஸில் ஏறும் போதே பஸ் முன்னோக்கிச் செலுத்தப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

விபத்து நேர்ந்தவுடனேயே சாரதி பஸ்ஸைக் கைவிட்டுத் தப்பிச் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பாக திக்வெல்ல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# டெங்கு நோயாளர்கள் 78 ஆயிரமாக உயர்வு!

கொழும்பு, ஜுலை. 23

இந்த ஆண்டு இதுவரை பதிவான டெங்கு நோயாளிகளின் எண்ணிக்கை 78,125 ஆக அதிகரித்துள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி, நேற்று முன் தினம் மட்டும் 1,097 நோயாளிகள் பதிவாகியுள்ளனர்.

தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் தரவுகளின்படி, நாடு முழுவதும் உள்ள 162 சுகாதார மருத்துவப் பிரிவுகள் அதிக அபாய மண்டலங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

கடந்த சில மாதங்களில் நோயாளிகளின் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

மே மாதத்தில் 8,590 நோயாளிகளும், ஜுன் மாதத்தில் 21,535 நோயாளிகளும், ஜுலை மாதத்தின் கடந்த 21 நாள்களில் மட்டும் 22,749 நோயாளிகளும் பதிவாகியுள்ளனர்.

இந்த ஆண்டு டெங்குவால் 56 இறப்புகள் நிகழ்ந்துள்ளன, மேலும் நோயாளிகளின் இறப்பு விகிதம் 0.07 வீதமாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

மாகாண அளவில், மேற்கு மாகாணத்தில் அதிகபட்ச நோயாளிகள் உள்ளனர். இது மொத்த நோயாளிகளில் 52.78 வீதம், அதாவது 41,236 நோயாளிகளைக் கொண்டுள்ளது.

தெற்கு மாகாணத்தில் 11,950 நோயாளிகளும் (15.30வீதம்), மத்திய மாகாணத்தில் 6,603 நோயாளிகளும் (8.45வீதம்) பதிவாகியுள்ளனர்.

மாவட்ட அளவில், கம்பஹா மாவட்டம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது, அங்கு 1,6478 நோயாளிகள் பதிவாகியுள்ளனர்.

அதேபோல், கொழும்பு மாவட்டத்தில் 15,540 நோயாளிகள் பதிவாகியுள்ளனர்.

மேலும், மாத்தறை மாவட்டத்தில் 5,454 நோயாளிகளும், கண்டி மாவட்டத்தில் 5,228 நோயாளிகளும், களுத்துறை மாவட்டத்தில் 5,135 நோயாளிகளும் பதிவாகியுள்ளனர். (அ)

# 2029 இல் நாமல் ராஜபக்ஷவை நிச்சயம் ஜனாதிபதி ஆக்குவோம்!

## இத்தேகந்தே சத்தாதிஸ்ஸ தேரர்



கொழும்பு, ஜுலை. 23

அரசாங்கம் தனது இயலாமையை மறைப்பதற்காக அடக்குமுறையையும் அச்சுறுத்தல்களையும் கையில் எடுத்துள்ளது. எதிர்க்கட்சிகளை நசுக்கிவிடலாம் என நினைப்பது அரசாங்கத்தின் அறியாமை. 2029 இல் நாமல் ராஜபக்ஷவை நிச்சயமாக ஜனாதிபதியாக்குவோம் என ராவணா பலய அமைப்பின் பொதுச்செயலாளர் இத்தேகந்தே சத்தாதிஸ்ஸ தேரர் தெரிவித்தார்.

கொழும்பு மகரகம பகுதியில் பொதுஜன பெரமுனவினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்-

பொதுஜன பெரமுன கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது பல சவால்களுக்கு மத்தியில் தனது வேட்பாளரைத் தீர்மானிக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது.

கட்சி பெரும் சரிவைச் சந்திக்கும் என்ற சூழல் நிலவியபோதிலும், கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ கட்சிக்குத் தலைமை தாங்க முன்வந்தார். தோல்வி அடைவோம் எனத் தெரிந்திருந்தும், வீழ்ச்சியடையும் கட்சியைக் காப்பாற்றும் நோக்கில் அவர் தைரியமாகப் போட்டியிட்டார்.

அவ்வாறு கட்டியெழுப்பப்பட்ட எமது கட்சி, வரும் 2029 ஆம் ஆண்டு நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலில் நாமல் ராஜபக்ஷவை நிச்சயமாக நாட்டின் ஜனாதிபதியாக அரியணையிலேற்றும்.

இதற்கான தயாரிப்புகளும், மக்கள் எழுச்சியும் தற்போதே ஆரம்பமாகிவிட்டன. எமது நாட்டின் வரலாற்றுச் சிறப்புமிக்க மகரகம பௌத்த பூமி, எப்போதும் பொதுஜன பெரமுனவின் வெற்றிக்காக உறுதியுடன் நின்றுள்ளது.

தற்போதைய அரசாங்கத்துக்கு எந்தவிதமான தெளிவான தொலைநோக்குப் பார்வையும் கிடையாது. நாட்டைச் சரியாகக் கொண்டு செல்லும் அனுபவமிக்க நபர்கள் அவர்களிடம் இல்லை. சிறைச்சாலைகளின் கொள்ளளவை விட அதிகமானோரை அடைத்து வைத்து, அங்கு நடக்கும் அசம்பாவிதங்களுக்கும் அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும்.

அரசாங்கத்தின் பொய்ப்பிரசாரங்களுக்கும், ஊடகங்கள் மூலம் முன்னெடுக்கப்படும் அடக்குமுறைகளுக்கும் மக்கள் ஏமாறப்போவதில்லை. பௌத்த சாசனத்துக்கும், நாட்டின் கலாசாரத்துக்கும் எதிரான செயற்பாடுகளை மக்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.

ஐந்து ஆண்டுகள் ஆட்சி செய்ய அவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருந்தாலும், வன்முறையற்ற முறையில் ஜனநாயக வழியில் 2029 தேர்தலில் இந்த அரசாங்கத்தைத் தோற்கடிப்போம்.

அனைத்துக் கட்சிகளும், மக்களும் ஒன்றாக இணைந்து ஒரு பலமிக்க சக்தியாகத் திரண்டு, 2029ஆம் ஆண்டில் நாமல் ராஜபக்ஷவை நாட்டின் ஜனாதிபதியாக ஆட்சிபீடமேற்றுவோம்- என்றார். (அ)

# யாழ்ப்பாணம் முதல் காலி வரை எட்டு தொன் பிளாஸ்ரிக் அகற்றல்!

கொழும்பு, ஜுலை. 22

யாழ்ப்பாணம் முதல் காலி ஊடாக யால வரையிலான நீண்ட ஆழ்கடல் கடலோரப் பிராந்தியக் கரைகளில் ஒதுங்கிக் கிடந்த சுமார் எட்டு தொன் எடையுடைய பிளாஸ்ரிக் போத்தல்கள் அனைத்தும், மீள்சுழற்சிப் பணிகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகக் கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்தியப் பெருங்கடலின் கேரளா கடற்பரப்பில் வைத்து அண்மையில் தீப்பற்றி முழுமையாக அழிவடைந்த "எம்எஸ்சி எல்சா-3" என்ற சர்வதேசச் சரக்குக் கப்பலிலிருந்து வெளியேறி, இலங்கைக் கடற்பரப்பில் மிதந்து வந்த நச்சுத்தன்மை வாய்ந்த பிளாஸ்ரிக் மணிகளை அகற்றும் விசேட கூட்டுச் சுற்றிவளைப்பு நடவடிக்கைகளுக்கு இணையாகவே இப் பாரிய பிளாஸ்ரிக் போத்தல் சேகரிப்புப் பணிகளும் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டதாக அதிகார சபையின் தலைவர் சமந்த குணசேகர விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

எமது நாட்டின் கடல்சார் உள்கட்டமைப்பு மற்றும் சூழலியல் பொறிமுறையைப் பல தசாப்தங்களாகப் பேரழிவுக்கு உள்ளாக்கி வந்த இக் கொடூரக் கழிவுகளை அடியோடு அகற்றி, எமது கடலோர வலயங்களைச் சர்வதேசத் தரத்திற்குத் தூய்மைப்படுத்துவது ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க மைல்கல்லாகும் என அவர் பெருமிதம் வெளியிட்டார்.

ஆசிய உள்கட்டமைப்பு மற்றும் பொதுச் சுகாதாரப் பாதுகாப்புக்குப் பலம் சேர்க்கும் வகையில் முன்னெடுக்கப்பட்ட இப் பிரம்மாண்ட தூய்மைப்படுத்தல் பணிகளுக்காக மொத்தம் 1800 விசேடகளப் பணியாளர்கள் நாடளாவிய ரீதியில் கடலோர வலயங்களில் முழு வீச்சில் ஈடுபடுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# இலங்கைக்கு 600 சொகுசு பஸ்கள் கொள்வனவு செய்வதற்கு அனுமதி!

கொழும்பு, ஜுலை. 23

இலங்கை போக்குவரத்து சபையின் நகரங்களுக்கு இடையிலான மற்றும் தொலைதூர சேவைகளுக்காக, முன்பு திட்டமிடப்பட்டிருந்த 600 சாதாரண பஸ்களுக்கு பதிலாக, 600 குளிரூட்டப்பட்ட புதிய பஸ்களை கொள்வனவு செய்ய அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

2026ஆம் ஆண்டுக்கான அரச முதலீட்டுத் திட்டத்தின் கீழ், 49 - 54 இருக்கைகள் கொண்ட பஸ்களை கொள்வனவு செய்வதற்காக 14,400 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது.

2025-2026 வீதி பாதுகாப்புத் திட்டத்தின் அடிப்படையில், நகரங்களுக்கு இடையிலான மற்றும் தொலைதூர சேவைகளுக்கு குளிரூட்டப்பட்ட சொகுசு பஸ்கள் மிகவும் பொருத்தமானவை என அடையாளம் காணப்பட்டதைத் தொடர்ந்து, புதிய தொழில்நுட்ப விவரக்குறிப்புகளுக்கு அமைவாக பஸ்களை கொள்வனவு செய்வதற்கான யோசனைக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. (அ)

# விவசாயிகளின் நிதிப் பாதுகாப்புக்கு புதிய விவசாயக் காப்பீட்டுத் திட்டம்!

கொழும்பு, ஜுலை. 23

விவசாயம் மற்றும் விவசாயக் காப்பீட்டுச் சபை, பயிர் இழப்புகளால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்குவதற்காக உருளைக்கிழங்கு மற்றும் காய்கறி பயிர் செய்கையை உள்ளடக்கிய ஒரு புதிய காப்பீட்டுத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்தத் திட்டம், விவசாயத் திணைக்களத்தால் பரிந்துரைக்கப்பட்ட மரவள்ளிக்கிழங்கு, பீட்ரூட், முட்டைக்கோஸ், கரட், லீக்ஸ், கத்தரிக்காய், வெண்டிக்காய், அவரை, குடை மிளகாய், தக்காளி, பாகற்காய் மற்றும் பூசணி உள்ளிட்ட பயிர்களை உள்ளடக்கும்.

ஆரம்பக் காப்பீட்டுத் தொகையில் 7 வீத கட்டணத்தைச் செலுத்துவதன் மூலம் விவசாயிகள் இக்காப்பீட்டுப் பாதுகாப்பைப் பெறலாம் என்று சபை தெரிவித்துள்ளது.

இயற்கைப் பேரழிவுகள், கட்டுப்படுத்த முடியாத தாவர நோய்கள், பூச்சிகளால் ஏற்படும் சேதங்கள் மற்றும் காட்டு யானைகளின் தாக்குதல்களால் ஏற்படும் இழப்புகளுக்கு இத்திட்டத்தின் கீழ் இழப்பீடு வழங்கப்படும். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தமிழர் வரலாற்றை அழிப்பதை உடனடியாக நிறுத்தவேண்டும்!

## தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி வலியுறுத்து

திருமலை, ஜூலை. 23

கிழக்கில் திருகோணமலை மாவட்டத்தில் தமிழர் வரலாற்று, பண்பாட்டு முக்கியத்துவம் வாய்ந்த கன்னியா வெந்நீர் ஊற்று பகுதியில், புத்த விகாரைக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நடைபெறவுள்ளதாக வெளியாகியுள்ள தகவல்கள் பொதுமக்கள் மத்தியில் ஆழ்ந்த கவலையை ஏற்படுத்தியுள்ளது என தமிழர் சமூக ஜனநாயகக் கட்சியின் திருகோணமலை மாவட்ட செயலாளர் சின்னமோகன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கன்னியா வெந்நீர் ஊற்று என்பது தமிழர்களுக்கும், குறிப்பாக இந்து மக்களுக்கும், மிக நீண்டகால வரலாற்று மற்றும் ஆன்மீக தொடர்புடைய புனிதத் தலமாகும். இப்பகுதியை புனித இடமாகவும் தமிழ் மக்கள் பல தலைமுறைகளாகக் கருதி வந்துள்ளனர் வருகின்றனர்.

இந்நிலையில், புனித பிள்ளையார் ஆலயம் அமைந்திருந்ததாகக் கூறப்படும் பகுதியில் புத்த விகாரைக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நடைபெறவுள்ளதாக வெளியாகியுள்ள தகவல்கள் மக்களிடையே பதற்றத்தையும் எதிர்காலம் குறித்த அச்சத்தையும் உருவாக்கியுள்ளது.

கன்னியா என்பது ஒரு மதத் தலம் மட்டுமல்ல அது திருகோணமலையின் வரலாறு தமிழர் பாரம்பரியம் மற்றும் தமிழ் மக்களின் அடையாளத்துடன் பின்னிப் பிணைந்துள்ள ஒரு முக்கிய தமிழர் மரபுரிமைச் சின்னமாகும். இதுபோன்ற வரலாற்று மற்றும் மத உணர்வுகள் சம்பந்தப்பட்ட இடங்களில் எடுக்கப்படும் எந்தவொரு தீர்மானமும் அனைத்து தரப்பினருடனும் கலந்தாலோசித்து, சட்ட நடைமுறைகளுக்கு இணங்கவும், தொல்லியல் மற்றும் வரலாற்று ஆதாரங்களின் அடிப்படையிலும் மேற்கொள்ளப்பட வேண் டும்.

இந்த விவகாரம் தொடர்பில் பல்வேறு சமூக அமைப்புகளும் பொதுமக்களும் முன்வைக்கும் கவலைகளை அரசாங்கமும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் உரிய முறையில் கவனத்தில் கொள்ள வேண்டும். அனைத்து இனங்களும் மதங்களும் பரஸ்பர மரியாதையுடனும் நல்லிணக்கத்துடனும் வாழும் சூழலைப் பாதுகாப்பது அனைவரினதும் பொறுப்பாகும்.

மேலும், கன்னியா வெந்நீர் ஊற்று தொடர்பான வரலாற்று மற்றும் தொல்லியல் உண்மைகள் குறித்து வெளிப்படையான விளக்கத்தை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வழங்க வேண்டும் என்றும், எந்தவொரு அபிவிருத்தி அல்லது கட்டுமான நடவடிக்கைகளும் சட்ட நடைமுறைகள், நீதிமன்ற உத்தரவுகள் மற்றும் அனைத்து சமூகங்களின் மத, பண்பாட்டு உணர்வுகளை மதிக்கும் வகையில் முன்னெடுக்கப்படவேண்டும்-என்றார். (அ)

# பொலிஸ் நிலையத்தினுள் மோதலில் ஈடுபட்ட 5 பேருக்கு சிறைத்தண்டனை

அம்பாறை, ஜூலை. 23

குடும்பத் தகராறு தொடர்பான விசாரணைக்காக கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்திற்கு அழைக்கப்பட்டிருந்த இரு தரப்பினரும், பொலிஸ் நிலைய வளாகத்திலேயே மீண்டும் மோதலில் ஈடுபட்ட சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட 5 பேருக்கு கல்முனை நீதிவான் நீதிமன்றம் தலா 300 ரூபாய் அபராதமும், 5 ஆண்டுகளுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஒரு மாத கடூழியச் சிறைத்தண்டனையும் விதித்து உத்தரவிட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை கல்முனை புறநகர்ப் பகுதியைச் சேர்ந்த இரு தரப்பினருக்கிடையில் ஏற்பட்ட குடும்பத் தகராறு தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக அவர்கள் கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்திற்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

அவர்களிடம் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டதையடுத்து, இரு தரப்பினரும் சமாதானமாகச் செல்ல இணக்கம் தெரிவித்தனர். இதன்பின், பல்வேறு குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் கே.எல்.எம். முஸ்தபா, அவர்களை தலைமையகப் பொறுப்பதிகாரியின் அறைக்கு அழைத்துச் சென்றுள்ளார்.

அப்போது, பொலிஸ் நிலைய வளாகத்திற்குள்ளேயே பொது மக்கள் மற்றும் அங்கிருந்தோரின் முன்னிலையில் இரு தரப்பினரும் மீண்டும் வாக்குவாதத்தில் ஈடுபட்டு மோதிக்கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து, கல்முனை தலைமையக பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி லசந்த களுவாராய்ச்சி, பொது இடத்தில் அமைதிக்குப் பங்கம் விளைவித்த குற்றச்சாட்டின் பேரில் இரு தரப்பினரையும் சேர்ந்த 5 பேரை உடனடியாகக் கைது செய்து, நீதிமன்ற உத்தரவின் பேரில் பொலிஸ் நிலையத்திலுள்ள இரு தனித்தனி சிறைக் கூடங்களில் தடுத்து வைத்தார்.

கைது செய்யப்பட்ட 5 சந்தேகநபர்களும் கல்முனை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். விசாரணையின் போது, சந்தேகநபர்கள் தரப்பில் மன்னிப்புக் கோரப்பட்டதுடன், சமாதானமாகச் செல்ல விரும்புவதாக நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

எனினும், வழக்கை விசாரித்த நீதிவான், ஐந்து பேருக்கும் தலா 300 ரூபாய் அபராதம் விதித்ததுடன், 5 ஆண்டுகளுக்கு ஒத்தி வைக்கப்பட்ட ஒரு மாத கடூழியச் சிறைத்தண்டனையும் வழங்கி தீர்ப்பளித்தார்.

(அ)

# மோஹினி நீர்வீழ்ச்சியில் ஓட்டோ விழுந்து விபத்து!


## இருவர் பலி! சிறுவர்கள் படுகாயம்!!

ஹற்றன், ஜூலை. 23

நல்லத்தண்ணியிலிருந்து மஸ்கெலியா நோக்கிப் பயணித்த ஓட்டோ ஒன்று மோஹினி நீர்வீழ்ச்சி அருகிலுள்ள பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளானதில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

குறித்த ஓட்டோவில் இரு முதியவர்களும் இரண்டு சிறுவர்களும் பயணித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்தில் முதியவர்கள் இருவர் உயிரிழந்துள்ள நிலையில், காயமடைந்த இரண்டு சிறுவர்கள் பலத்த காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.



விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# நாடு முழுவதும் 112 அவசர சோதனைகள் நுகர்வோர் விவகார அதிகார சபை அதிரடி!

கொழும்பு, ஜூலை. 23

நுகர்வோர் அதிகார சபை, நேற்று முன் தினம் நாடு முழுவதும் உள்ள முக்கிய நகரங்களில் உள்ள பஸ் நிலையங்கள், போக்குவரத்து மையங்கள் மற்றும் முக்கிய நீண்ட தூர பஸ் நிலையங்களுக்கு அருகிலுள்ள வியாபார நிலையங்கள் மற்றும் சிற்றுண்டிச்சாலைகளைக் குறிவைத்து 112 சிறப்பு அவசர சோதனைகளை நடத்தியது.

பொதுமக்களும் பயணிகளும் தொடர்ந்து கூடும் போக்குவரத்து மையங்களுக்கு அருகில் நிகழும் நியாயமற்ற வர்த்தக முறைகேடுகளிலிருந்து நுகர்வோரைப் பாதுகாப்பதே இந்த சிறப்பு நடவடிக்கையின் முக்கிய நோக்கம் என்று நுகர்வோர் விவ கார அதிகாரசபை கூறியது.

உற்பத்தியாளரால் குறிப்பிடப்பட்ட அதிகபட்ச சில்லறை விலையை விட அதிக விலையில் குளிர்பானங்கள், சிற்றுண்டிகள் மற்றும் பொட்டலமிடப்பட்ட உணவுப் பொருட்களை விற்பனை செய்தல், பேக்கரி பொருட்கள், பிற உணவுப் பொருட்கள் மற்றும் பொருட்களின் விலைகளை நுகர்வோர் தெளிவாகப் பார்க்கும் வகையில் காட்சிப்படுத்தத் தவறுதல், பொட்டலமிடப்பட்ட பொருள்களில் உற்பத்தி திகதி, காலாவதி திகதி, தொகுதி எண், உற்பத்தியாளரின் பெயர் மற்றும் முகவரி உள்ளிட்ட அத்தியாவசிய தகவல்களைக் குறிப்பிடத் தவறுதல், மற்றும் காலாவதியான உணவுப் பொருட்களை விற்பனைக்குக் காட்சிப்படுத்துதல் ஆகியவை இந்த சோதனைகளின் போது கண்டறியப்பட்டன என்று நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்தக் குற்றங்களைச் செய்த வியாபார நிலையங்கள் மற்றும் சிற்றுண்டிச்சாலைகள் மீது நுகர்வோர் விவகார ஆணையச் சட்டத்தின் விதிகளின் கீழ் சம்பந்தப்பட்ட நீதிமன்றங்களில் வழக்குகள் பதிவு செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று ஆணையம் தெரிவித்துள்ளது.

பயணிகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட விலையை விட அதிக விலையில் பொருட்களை விற்பனை செய்யும் மற்றும் தரமற்ற உணவுப் பொருட்களை வழங்கும் வியாபாரிகள் மீது, அவர்களின் தகுதி பேதமின்றி சட்டம் கடுமையாக அமுல்படுத்தப்படும்.

மேலும், எதிர்காலத்திலும் நாடு முழுவதும் இதுபோன்ற சிறப்புச் சோதனைகளைத் தொடர்ந்து நடத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அதிகார சபை மேலும் தெரிவித்துள்ளது.

இதுபோன்ற நியாயமற்ற வர்த்தக முறைகேடுகள் குறித்த தகவல்களை, நுகர்வோர் விவகார ஆணையத்தின் தொடர்பு இலக்கம் 1977 வழியாக, அலுவலக நேரங்களில் புகார் பிரிவிடம் வழங்குமாறு நுகர்வோர் அதிகார சபை பொதுமக்களைக் கேட்டுக்கொண்டுள்ளது.

(அ)

# டித்வா புயலால் அநாதரவான சிறுவர்களுக்கான உதவித் தொகையை விரைவுபடுத்த பணிப்புரை

கொழும்பு, ஜூலை. 23

டிட்வா புயலால் அநாதரவாக்கப்பட்ட சிறுவர்களுக்கான மாதாந்த உதவித்தொகையை விரைவுபடுத்துமாறு தொடர்புடைய அதிகாரிகளுக்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பணிப்புரை விடுத்துள்ளார்.

மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் 2026 ஆம் ஆண்டு பாதீட்டு ஒதுக்கீடுகளின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களின் முன்னேற்றங்களை மீளாய்வு செய்வதற்கும், 2027 ஆம் ஆண்டுக்கான பாதீட்டு முன்மொழிவுகளைப் பரிசீலிப்பதற்கும் ஜனாதிபதி தலைமையில் நேற்று முன் தினம் இடம்பெற்ற கூட்டத்தில் இந்த பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த கூட்டத்தில், சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனங்களின் 2026 ஆம் ஆண்டுக்கான தொடர் மற்றும் மூலதனச் செலவீனங்களின் முன்னேற்றங்கள் விரிவாக ஆராயப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன், நிறுவனப் பராமரிப்பு மற்றும் பாதுகாவலர் முறைமை, வீதியோரம் வசிக்கும் சிறுவர்களுக்கான வாழ்க்கைச் செலவுப்படி, கர்ப்பிணித் தாய்மார்களுக்கான போசாக்கு உணவுப்படி, முன்பள்ளி காலை உணவுத் திட்டம் மற்றும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான “குரு அபிமானி” கொடுப்பனவுத் திட்டம் உள்ளிட்ட அமைச்சின் முக்கிய நிகழ்ச்சிகளின் முன்னேற்றங்களையும் ஜனாதிபதி மீளாய்வு செய்துள்ளார்.

அத்துடன், டித்வா சூறாவளியால் பெற்றோரை இழந்த சிறுவர்களுக்கு மாதாந்திரக் கொடுப்பனவை வழங்கும் திட்டத்தின் முன்னேற்றம் குறித்தும் இந்த கூட்டத்தில் ஆராயப்பட்டதுடன், தகுதியான சிறுவர்களுக்கு அந்த கொடுப்பனவு தாமதமின்றி விநியோகிக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

(அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## அரசியல் கைதிகள்...

நாட்டின் சட்டத்துக்கு உட்பட்டு விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என ஜனாதிபதி தேர்தலிலும், அதைத் தொடர்ந்து பாராளுமன்றத் தேர்தலிலும் வாக்குறுதி அளிக்கப்பட்டது.

அதுமட்டுமன்றி, இனங்களுக்கு இடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்தவும், நாட்டில் நல்லிணக்கத்தை மீண்டும் கட்டியெழுப்பவும், குறிப்பாக போர் முடிந்த பின்னர், வழக்கு விசாரணைகள் இன்றி சுமார் 14,000 பேர் வரை புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர். மேலும் பலர் நிபந்தனைகளுடன் விடுவிக்கப்பட்டு புனர்வாழ்வுக்கு அனுப்பப்பட்டனர். சிலருக்கு தண்டனைக் குறைப்பும் வழங்கப்பட்டது.

இத்தகைய பின்னணியில், கடந்த தேர்தல்களில் வாக்குறுதியளித்தபடி, அந்த மனிதர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் வகையில், நீதி அமைச்சராக உங்கள் அரசாங்கத்தின் அரசியல் நிலைப்பாடு என்ன?- என்று கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதில் அளித்த நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார-

மகசின் சிறைச்சாலைகளில் உள்ள நிலையை பல முறை நான் நேரில் பார்வையிட்டுள்ளேன். வழக்கு விசாரணைகள் இன்றி எவரும் தடுத்து வைக்கப்படவில்லை. அனைவருக்கும் வழக்குகள் நிலுவையில் உள்ளன. சிலர் நீதிமன்றத்தால் குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.

எனவே, இவர்கள் அரசியல் காரணங்களுக்காக சிறையில் இல்லை. நாட்டின் குற்றவியல் சட்டங்களை மீறியதற்காகவே சிறையில் உள்ளனர்.

இருப்பினும், நாட்டில் ஏற்பட்ட சமூக, பொருளாதார மற்றும் அரசியல் சூழல் குறித்த புரிதல் எங்களுக்கு உள்ளது. இதற்காக நீதித்துறை அமைச்சு மற்றும் பிற அமைப்புகளின் பிரதிநிதிகளைக் கொண்ட குழு அமைக்கப்பட்டு, கடந்த 6 மாதங்களாகக் கலந்துரையாடி, சுமார் 10 நாள்களுக்கு முன்பு அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளது.

அனைத்து கைதிகளுக்கும் பொருந்தக்கூடிய வகையில், பொது மன்னிப்பு அல்லது தண்டனைக் குறைப்பு வழங்குவது குறித்து அக்குழு பரிந்துரைத்துள்ளது. வடக்கு, கிழக்கு மட்டுமின்றி தெற்கு மக்களுக்கும் நீதியை வழங்கவே நினைக்கிறோம். ஆனால், நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்ட ஒருவரை விடுவிக்குமாறு நீதி அமைச்சரோ அல்லது அரசாங்கமோ உத்தரவிட முடியாது. அதற்கு மேல்முறையீட்டு நடைமுறைகள் மற்றும் பிணை நடைமுறைகள் உள்ளன-என்றார். (அ)

## செம்மணி மனித...

புதைகுழியில் முன்னெடுக்கப்படும் அகழ்வுப் பணிகளை ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் கார்மென் மொரேனோ, ஜேர்மன் தூதுவர் கலாநிதி பெலிக்ஸ் நியூமன், பிரான்ஸ் தூதுவர் ரெமி லம்பேர்ட், இத்தாலித் தூதுவர் டாமியானோ பிராங்கோவிக், நெதர்லாந்து தூதுவர் விபே டி போயர், ஐரோப்பிய ஒன்றிய அதிகாரிகளான பிரதித் தூதுக் குழுத் தலைவர் கலியா அகிஷேவா ஒத்துழைப்புப் பிரிவுத் தலைவர் கலாநிதி ஜோஹன் ஹெஸ் ஆகியோர் அடங்கிய குழுவினர் பார்வையிட்டனர். (அ)

## உறவுகளை...

யாழ்ப்பாணம், செம்மணி - சித்துப்பாத்தி இந்து மயானத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகளைப் பார்வையிடுவதற்காக, நேற்று புதன்கிழமை ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர் கார்மென் மொரேனோ, ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி மற்றும் நெதர்லாந்து நாடுகளின் தூதுவர்கள் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் உயர் அதிகாரிகள் என 8 உறுப்பினர்கள் வருகை தந்திருந்தனர்.

தூதுவர்களின் வருகையையொட்டி, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தினரும் சிவில் அமைப்புக்களும் இணைந்து செம்மணி - சித்துப்பாத்தி மயானத்துக்கு முன்னால் ஏ - 9 வீதியோரமாகப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது, போராட்டம் நடைபெற்ற பகுதிக்குச் சென்ற தூதுவர்கள் குழுவினர், செம்மணி - சித்துப்பாத்தி இந்து மயான வாயிலில் வைத்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதன்போது, ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் கார்மென் மொரேனோ உறவினர்களை ஆரத்தழுவிக் கண்கலங்கியமையுடன், அவர்களின் கோரிக்கைகளையும் கவனமாகச் செவிமடுத்தார். தொடர்ந்து, பாதிக்கப்பட்ட உறவினர்களின் சங்கம் சார்பில் தூதுவர்களிடம் கோரிக்கை மகஜரும் கையளிக்கப்பட்டது.

இதன்போது நீங்கள் தந்தது வெறும் காகிதம் அல்ல என்பது எமக்கு தெரியும். இதனை எனது உள்ளத்தால் ஏற்கின்றேன். நான் உறுதி மொழிதரமுடியாது. ஆனால் உங்களின் துன்ப துயரங்களை அறிவோம். உங்கள் பிரச்னைகளை என்னால் முடிந்தவரையும் ஐ.நா சபையிலும், மனித உரிமைகளை பேணும் நாடுகளிடமும் எடுத்து கூறுவோம் என ஐரோப்பிய ஒன்றியத்தின் துதுவர் கார்மென் தலைமையிலான குழுவினர் எடுத்துரைத்துள்ளனர். (அ)

## மனிதப் புதைகுழியில்...

போராட்டத்தில் ஈடுபட்டனர்.

காலை 8.00 மணியளவில் ஆரம்பமான இந்தப் போராட்டத்தில், போர் நிறைவடைந்து பல ஆண்டுகள் கடந்தும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்காத நிலை தொடர்வதாக போராட்டக்காரர்கள் சுட்டிக்காட்டினர்.

மேலும், செம்மணி மனிதப்புதைகுழி அகழாய்வில் இதுவரை 467 மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்ட நிலையில், இவ்விடயம் தமிழ் இன அழிப்பின் முக்கிய சான்றாக இருப்பதாகவும், அதனால் சுயாதீனமான சர்வதேச நீதி விசாரணை அவசியம் எனவும் அவர்கள் வலியுறுத்தினர்.

சித்துபாத்தி மனிதப்புதைகுழியைப் பார்வையிட்ட ஐரோப்பிய ஒன்றியத்தின் சிறப்பு பிரதிநிதிகள் குழுவின் கவனத்தை ஈர்க்கும் நோக்கில் இந்தக் கவனயீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இப்போரட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், பல்கலைக்கழக மாணவர்கள், சிவில் சமூக பிரதிநிதிகள், அரசரார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)

## ஐரோப்பிய ஒன்றிய...

இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எங்கள் பிரச்னைகளை சரியான விதத்தில் தாங்கள் பேசுவார்கள் என்றும் ஆனால் எங்கள் பிரச்னைகளுக்கு தீர்வு வழங்கத் தங்களால் முடியுமா என்று கூற முடியாது எனவும் அவர்கள் தெரிவித்தனர். தங்களால் இயன்றவரை எங்களுக்காக வேலை செய்ய முடியும் என்று கூறினர்.

எங்கள் உறவுகளுக்கு என்ன நடந்தது என்று கூற வேண்டும், இங்கே நடந்தது இனப்படுகொலைதான் என்று சர்வதேசம் ஏற்றுக்கொள்ள வேண்டும், சர்வதேசத்தின் ஊடான நீதி விசாரணை தான் எங்களுக்கு வேண்டும். உள்ளகப் பொறிமுறைகளையோ, உள்ளக விசாரணைகளையோ, ஓ.எம்.பி. அலுவலகங்களையோ நாங்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டோம்.

நாங்கள் எத்தனையோ ஆணைக்குழுக்களைச் சந்தித்துள்ளோம், எத்தனையோ ஆட்சியாளர்களைச் சந்தித்துள்ளோம். இவை எல்லாவற்றையும் கடந்து தான் நாங்கள் ஒரு சர்வதேச விசாரணையை கோரியுள்ளோம். சர்வதேசம மீது உள்ள நம்பிக்கையில் தான் நாங்கள் இற்றைவரை சர்வதேசத்திடம் கோரிக்கையை முன்வைத்து வருகிறோம்.

எங்களுடன் இருந்த காணாமல் ஆக்கப்பட்டோரது உறவுகள் 450 இற்கும் மேற்பட்டோர் இற்றைவரை உயிரிழந்துவிட்டார்கள். அவர்களுக்கான நீதி கிடைக்க வேண்டும். கொடூர யுத்தத்தின் பின்னர் கையளிக்கப்பட்ட உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை சர்வதேசம்தான் விசாரணை செய்யவேண்டும். கொலையாளிகள் ஒருபோதும் எமக்குத் தீர்வைத் தர மாட்டார்கள். கொலையாளிகள் குற்றவியல் நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்படவேண்டும் என்று அவர்களிடம் குறிப்பிட்டோம்- என்றார். (அ-05)

## வலி.வடக்கு...

வர்த்தமானியை அரசாங்கம் மீளப் பெறுவதற்கான அழுத்தத்தை வழங்குமாறு யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளிடம் சிவில் அமைப்பின் பிரதிநிதிகள் எழுத்து மூலமாக கோரிக்கையை முன் வைத்துள்ளனர்.

இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றிய தூதுவர் மற்றும் ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடுகளின் தூதுவர்களுக்கும் சிவில் அமைப்பு பிரதிநிதிகளுக்கும் இடையிலான உயர் மட்ட கலந்துரையாடல் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் இடம்பெற்ற போதே இவ்வாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

யுத்தம் நிறைவடைந்து 17 வருடங்கள் கடந்தும் பொதுமக்களின் காணிகள் பாதுகாப்புப் படைகளினால் விடுவிக்கப்படாமல் கையகப்படுத்தப்பட்டு இருக்கிறது.

வலி.வடக்கு மக்களின் காணிகள் பாதுகாப்பு அமைச்சினால் சுவீகரிக்கப்பட்டுள்ளதாக வெளியிடப்பட்ட வர்த்தமானி இதுவரை மீளப் பெறப்படவில்லை.

அத்துடன் காணிகளை பாதுகாப்புத் தரப்பினரிடம் இருந்து விடுவிப்பதற்கும் சுவீகரிப்பு வர்த்தமானியை மீளப் பெறுவதற்கும் இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தத்தை வழங்குமாறு இந்தச் சந்திப்பின்போது சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் கோரிக்கை முன்வைத்தனர்.

கலந்துரையாடலில் இலங்கையின் தற்போதைய அரசியல் மற்றும் பொருளாதார சூழ்நிலை, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்தி, மனித உரிமைகள், நல்லாட்சி, சமூக நீதி, போரால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதார மீட்பு மற்றும் நிலையான அபிவிருத்தி தொடர்பான பல முக்கிய விடயங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் சிறுபன்மை மக்களின் நீண்ட கால காணி உரிமைப் பிரச்னைகள், காணி மீட்பில் நிலவும் தாமதங்கள், காணி அபகரிப்பு, மற்றும் சுவீகரிப்பு அவற்றின் காரணமாக மக்கள் எதிர்நோக்கும் சமூக, பொருளாதார மற்றும் வாழ்வாதார சவால்கள் தெளிவாக கலந்துரையாடப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் கார்மென் மொரேனோ, ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான தூதுவர் கலாநிதி பெலிக்ஸ் நியுமன், ஜேர்மனி தூதுவர் ரெமி லம்பேர்ட், பிரான்ஸ் தூதுவர் டாமியானோ பிராங்கோவிக், இத்தாலி தூதுவர் விபே டி போயர், மற்றும் தொடர்பாடல் ஒருங்கிணைப்பாளர் செல்வி சாரா பொன்சேகா சில்வா உள்ளிட்ட ஐரோப்பிய ஒன்றிய அதிகாரிகளும் கலந்துகொண்டனர். (அ)

## பிலிப்பைன்ஸ் சென்றார்...

நட்பு மற்றும் கூட்டுறவு ஒப்பந்தத்தின் 50 ஆவது ஆண்டு விழாவில் பங்கேற்பதற்காக நேற்று புதன்கிழமை பிலிப்பைன்ஸ் நாட்டின் மணிலா நகரைச் சென்றடைந்துள்ளார்.

இது தொடர்பில் அமைச்சர் விஜித ஹேரத் தனது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில்,

இந்தப் பயணம் ஆசிய பிராந்திய கூட்டமைப்பு மற்றும் ஆசியான் உறுப்பு நாடுகளுடனான இலங்கையின் ஆக்கபூர்வமான இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவதையும் ஆழப்படுத்துவதையும் உறுதிப்படுத்துகிறது எனக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த சர்வதேச மாநாட்டில் பங்கேற்கும் பல்வேறு நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் மற்றும் உயர்மட்டப் பிரதிநிதிகளுடனும் அவர் இரு தரப்புச் சந்திப்புகளை நடத்தத் திட்டமிட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## குட்டிமணி, தங்கத்துரைக்கு...

உத்தரவிட்டுள்ளது.

இவர்களின் 43ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு, எதிர்வரும் 25 ஆம் திகதி குறித்த உருவச்சிலையைத் திறந்து வைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த நிலையிலேயே நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

முன்னதாக, சிலை அமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்தவர்களில் ஒருவரான சதீஷ் என்பவரை வல்வெட்டித்துறைப் பொலிஸார் நிலையத்துக்கு அழைத்து விசாரணை நடத்தி, வாக்குமூலம் பெற்றிருந்தனர்.

அதனைத் தொடர்ந்து அவர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட நிலையில், பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையிலேயே, வழக்கு விசாரணை நேற்று மீண்டும் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

சிரேஷ்ட சட்டத்தரணி என்.சிறீகாந்தா, சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் உள்ளிட்ட சட்டத்தரணிகள் குழுவினர் மன்றில் ஆஜராகி வாதங்களை முன்வைத்தனர்.

இருபக்க வாதங்களையும் செவிமடுத்த நீதவான், எதிர்வரும் ஒகஸ்ட் 4 ஆம் திகதி வரை குறித்த இடத்தில் உருவச்சிலையை நிறுவும் பணிகளைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்குமாறு உத்தரவிட்டார். இச்சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (அ)

## 471 மனித எலும்புக்கூடு...

எஸ். லெனின்குமார் முன்னிலையில் நடைபெற்ற அகழ்வு பணிகளில் இதுவரை 471 மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றுள் 455 எலும்பு எச்சங்கள் துப்புரவாக்கப்பட்டு அடையாளம் இடப்பட்டு அகழ்ந்தெடுக்கப்பட்டு நீதிமன்றத்தின் காவலில் வைக்கப்பட்டுள்ளன. (அ)

## அடுத்த ஆண்டு...

வேளையின்போது இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம் முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றியதாவது-

மேலதிக கேள்வியை முன்வைத்த பாராளுமன்ற உறுப்பினர் சத்தியலிங்கம், வடக்கு மாகாணத்தில் பெருந்தொகையான விசேட தேவையுடையோர் இருக்கின்றனர். மன்னார், வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் இருந்து சக்கர நாற்காலிகள் பயன்படுத்தும் பெரும்பாலான நோயாளர்கள் யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்கு போகும் சூழல் நிலவுவதால் மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய இடங்களில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு குறைந்தது ஒருநாளைக்கு ஒரு மெட்ரோ பஸ் சேவையை உங்களால் ஒழுங்கு செய்ய முடியுமாக இருந்தால் அதன்மூலம் பெரும்பாலான நோயாளர்கள் பயனடைவார்கள். இதனால் அதனை செய்ய முடியுமா? - என்றார்.

இதற்கு எழுந்து பதிலளித்த போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க


அடுத்த வருடத்தில் வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம் உள்ளிட்ட பல்வேறு நகரங்களில் மெட்ரோ சேவைகளை அறிமுகப்படுத்த நாங்கள் எதிர்பார்த்துள்ளோம். வடக்கு மாகாணத்தில் பொது போக்குவரத்து சேவையை வினைத்திறனாக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu

# செம்மணி போராட்ட களத்தில் பொலிஸாரினால் குழப்பநிலை!

## போராட்டக்காரர்கள் குற்றச்சாட்டு



யாழ்ப்பாணம், ஜூலை. 23
செம்மணி புதைகுழிக்கு நீதி கோரி நேற்று முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தின்போது பொலிஸாரினால் குழப்பம் ஏற்பட்டதாகப் போராட்டக்காரர்கள் குற்றம்சாட்டப்பட்டியுள்ளனர்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகள் நேற்று செம்மணி சித்துப்பாத்தி இந்து மயானத்துக்குசென்ற போது சித்துப்பாத்தி மனிதப் புதைகுழிக்கு நீதி வேண்டி போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

அந்த போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பதாகைகளை ஏந்திய வாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போது காணாமல் ஆக்கப்பட்ட சிறார்களின் படங்களை தாங்கிய பதாகைகளையும் அவர்கள் ஏந்தி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது அந்த படங்கள் தாங்கிய பதாகைகளை ஊடகவியலாளர்கள் காணொளி மற்றும் புகைப்படம் பதிவு செய்யும்போது அதனை மறைக்கும் வகையில் பொலிஸார் குறுக்கே நின்றனர்.

இதன்போது அவற்றை மறைக்கவேண்டாம் என்று பொலிஸாருக்கு கூறியபோதிலும் அவர்கள் அங்கிருந்து நகராமல் நின்றதால் போராட்டக்காரர்களுக்கும் மக்களுக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டது.

பின்னர் பொலிஸார் அங்கிருந்து நகர்ந்து சென்றதை அவதானிக்க முடிந்தது. (அ-05)

# ஜனாதிபதி, அமைச்சர்கள் வசிக்காத வீடுகளை பராமரிப்பதற்காக 13 மில்லியன் ரூபாய் செலவு

## சமிந்த விஜேசிறி எம்.பி. சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூலை. 23
ஜனாதிபதிகள் மற்றும் அமைச்சர்கள் யாரும் தங்களுடைய அதிகாரபூர்வ இல்லங்களில் வசித்து வராத நிலையிலும், அந்த இல்லங்களைப் பராமரிப்பதற்காக 13 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி பாராளுமன்றில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

2025 மற்றும் 2026 ஆம் ஆண்டுகளில் ஜனாதிபதிகள் யாரும் இந்த உத்தியோகபூர்வ இல்லங்களில் வசிக்கவில்லை என்பதை நாம் அறிவோம். ஆனால், கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் இவற்றிற்காக 13 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. இதில் 2025 ஆம் ஆண்டில் 10 மில்லியன் ரூபாயும், 2026 ஆம் ஆண்டின் இதுவரை 3 மில்லியன் ரூபாயும் செலவிடப்பட்டுள்ளது. மக்கள் வரிப்பணத்தில் இருந்து இவ்வளவு தொகை செலவிடப்படுவது நியாயமற்றது.

முந்தைய ஆட்சிக்காலங்களில் ஜனாதிபதி மாளிகைகளைப் பராமரிக்க வருடத்துக்கு 15 முதல் 30 மில்லியன் ரூபாய் வரை செலவிடப்பட்டது. தற்போதைய அரசில் இச்செலவுகள் குறைந்திருந்தாலும், அதனால் மக்களுக்கு எந்த நேரடிப் பயனும் கிடைக்கவில்லை. தலைவர்களின் ஆடம்பரச் செலவுகள் குறையும்போது தங்களது அன்றாட வாழ்வாதாரச் செலவுகளும், உணவுப் பொருட்களின் விலையும் குறையும் என மக்கள் எதிர்பார்த்த போதிலும், சந்தையில் பொருள்களின் விலை குறையவில்லை-என்றார்.

இதன்போது கருத்து வெளியிட்ட பிரதமர் ஹரிணி அமரசூரிய-

ஜனாதிபதி மாளிகை அல்லது அமைச்சர்களின் உத்தியோகபூர்வ இல்லங்களை ஜனாதிபதியோ அல்லது அமைச்சரவை உறுப்பினர்களோ பயன்படுத்துவதில்லை என்பது நமது அரசாங்கத்தின் தெளிவான அரசியல் கொள்கையாகும். இருப்பினும், இவை நாட்டின் பொதுமக்களுக்கும் அரசாங்கத்துக்கும் சொந்தமான வரலாற்றுச் சிறப்புமிக்க தேசிய சொத்துக்கள் ஆகும்.

நாங்கள் இந்த மாளிகைகளில் தங்காவிட்டாலும், இவற்றை மாற்றுப் பொதுப் பயன்பாட்டுக்கு கொண்டு வரும் வரை முறையாகப் பராமரிக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். இல்லையெனில், பராமரிப்பின்றி இந்த தேசியச் சொத்துக்கள் முற்றிலும் பாழடைந்து வீணாகிவிடும் - என்றார். (அ)

# கிளிநொச்சி மாவட்ட விவசாயக் குழு கூட்டத்தில் எல்நினோ முன்னெச்சரிக்கை குறித்து ஆராய்வு

கிளிநொச்சி, ஜூலை. 23
கிளிநொச்சி மாவட்ட விவசாயக் குழுக் கூட்டம் நேற்று மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்தின் விவசாயத் துறையுடன் தொடர்புடைய பல்வேறு விடயங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டதுடன், எதிர்வரும் பெரும்போக நெற்செய்கையை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

குறிப்பாக, எல்நினோ கால நிலையால் ஏற்படக்கூடிய சவால்களை எதிர்கொள்வதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் நீர்வள முகாமைத்துவம் தொடர்பான முக்கிய தீர்மானங்கள் குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

இதன்போது, விவசாயத்துறையுடன் தொடர்புடைய திணைக்களங்களால் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் குறித்து துறை சார்ந்த அதிகாரிகள் விளக்கமளித்தனர்.

இந்தக் கூட்டத்தில் மேலதிக அரசாங்க அதிபர் (காணி), மாவட்ட பதில் விவசாயப் பணிப்பாளர், பிரதேச செயலாளர்கள், பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர், நீர்ப்பாசனப் பொறியியலாளர்கள், கமநல அபிவிருத்தித் திணைக்கள அதிகாரிகள், பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாயப் பீட விரிவுரையாளர்கள், மாவட்ட செயலக அதிகாரிகள், விவசாய சம்மேளன பிரதிநிதிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் கலந்து கொண்டனர். (அ)

# யாழில் தால வாரம் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஜூலை. 23
"பரம்பரை நுண்கலை வாழ்வின் பலம்" என்ற தொனிப் பொருளில், யாழ்ப்பாண மாவட்ட மகளிர் அபிவிருத்தி திணைக்களமும் மாவட்ட மகளிர் பணியகமும் இணைந்து நடத்தும் தால வாரம் கண்காட்சியும் விற்பனையும் நேற்று ஆரம்பமாகின.

யாழ்ப்பாணம் சங்கிலியன் பூங்காவில் நடைபெறும் இக் கண்காட்சியில், பனை சுய உதவித் தொழில் பொருள்கள், கைவினைப் பொருள்கள் மற்றும் பாரம்பரிய உற்பத்திப் பொருட்கள் காட்சிக்கும் விற்பனைக்கும் வைக்கப்பட்டுள்ளன.

மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த உற்பத்தியாளர்கள் தங்களது தயாரிப்புகளை பொதுமக்களின் பார்வைக்கும் கொள்வனவிற்கும் காட்சிப்படுத்தியுள்ளனர்.

தால வாரம் கண்காட்சி நேற்று முதல் எதிர்வரும் 26 ஆம் திகதி வரை, தினமும் காலை 9.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை நடைபெறவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (அ)

# நீதி அமைச்சருக்கு எதிரான பிரேரணை; வெள்ளிக்கிழமை விவாதத்துக்கு வரும்!

கொழும்பு, ஜூலை. 23
நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவுக்கு எதிராகச் சமர்ப்பிக்கப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் மீதான விவாதம் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறும்.

நேற்று முன் தினம் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு ஒன்று, நீதி அமைச்சர் ஹர்ஷன நணயக்காரவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை சபாநாயகர் சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன விடம் சமர்ப்பித்தனர்.

ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக்க, இந்தத் தீர்மானம் குறித்து கூடிய விரைவில் விவாதம் ஒன்றை நடத்த எதிர்க்கட்சி விரும்புவதாகத் தெரிவித்தார்.

இதற்கிடையில், நீதி அமைச்சர் தனது அனைத்துப் பொறுப்புகளையும் புறக்கணித்துவிட்டதாக பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி. பெரேரா குற்றம் சாட்டினார்.

நீர்கொழும்பு சிறைச்சாலையில் அண்மையில் ஏற்பட்ட அமைதியின்மையின்போது சிறை அதிகாரிகள் மற்றும் கைதிகள் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக, தனது பொறுப்பு மற்றும் கடமைப்பாட்டை நிறைவேற்றுவதில் நீதி அமைச்சர் தவறிவிட்டதாகக் கூறப்படும் நிலையில், அவருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை சமர்ப்பிக்க எதிர்க்கட்சி தீர்மானித்தது.

அதற்கிணங்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உள்ளிட்ட எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள், ஜூலை 10 அன்று பாராளுமன்றத்தில் நீதி அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் கையெழுத்திட்டனர். (அ)

# மன்னாரில் அருட்சகோதரிகள் பயணித்த வாகனம் விபத்து!

## நான்கு பேருக்குக் காயம்



மன்னார், ஜூலை. 23
கொழும்பில் இருந்து மன்னார் நோக்கி அருட்சகோதரிகள் பயணித்த வாகனம் ஒன்று நேற்று அதிகாலை 3:30 மணியளவில் பறைய நாளங்குளம் இரும்பு பாலத்தில் விபத்துக்குள்ளானது.

இதன்போது குறித்த வாகனத்தில் பயணித்த 4 அருட்சகோதரிகள் (கன்னியாஸ்திரிகள்) காயமடைந்த நிலையில் உடனடியாக மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

அவர்களில் ஒரு அருட்சகோதரி பலத்த காயங்களுக்கு உள்ளான நிலையில் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

மன்னாரைச் சேர்ந்த மாசற்ற அமலோற்பவ அன்னை சபையைச் சேர்ந்த அருட்சகோதரிகள் பயணித்த வாகனமே விபத்துக்கு உள்ளாகி உள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஜாலிய விக்ரமசூரியவுக்கு மீண்டும் பிடியாணை!

கொழும்பு, ஜூலை. 23
அரசாங்க நிதியை முறைகேடாகப் பயன்படுத்தியதாக சந்தேகத்தின் பேரில் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர், நீதிமன்றத்துக்கு சமூகமளிக்காமல் தலைமறைவாக இருக்கும் அமெரிக்காவுக்கான முன்னாள் இலங்கைத் தூதர் ஜாலிய விக்ரமசூரியவைக் கைது செய்து ஆஜர்படுத்துவதற்காக, கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் நேற்று மற்றொரு பிடியாணையைப் பிறப்பித்தது.

இந்த வழக்கு தொடர்பாக சட்டமா அதிபரிடம் ஆலோசனை பெற்ற பின்னர், கொழும்பு கோட்டை நீதவான் பசன் அமரசேன, டிசெம்பர் 9ஆம் திகதி நீதிமன்றத்தில் சாட்சியங்களைச் சமர்ப்பிக்குமாறு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு உத்தரவிட்டார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 23.07.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org